**OS. 22/2024**

**நாள். 24.04.2026.**

**பி. வா.சா.2 –சாத்தையா**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயம். அதைத்தவிர வேறு எந்த தொழில் இல்லை என்றால் சரிதான். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறேனா என்றால் இல்லை. நான் என் சொந்த நிலங்களில் தான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். பங்குக்கும் விவசாயம் செய்து வருகிறேன். 1, 3,4 ம் பிரதிவாதிகள் என் மக்கள் என்றால் சரிதான். வாதி சுப்பிரமணியனை எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதியின் சகோதரர் கோகுலகண்ணனை எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி தாவா வழக்கை எதற்காக போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்து எனக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை 10.12.2018 ம் தேதி 1 ம் பிரதிவாதியான என் மகனுக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்திவிட்டேன் என்றால் சரிதான். அதன்பிறகு 1 ம் பிரதிவாதி வாதியுடன் கடந்த 20.02.2019 ம் தேதி ஒரு கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டார் என்றால் தெரியாது. வாதி தாக்கல் செய்த பிராது நகல் எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சார்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு பிராதில் வாதியும் 1 ம் பிரதிவாதியும் 20.02.2019 ம் தேதி தாவா சொத்தை பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டதாக சொல்லப்பட்டுள்ள விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. தாவா வழக்கு பிராதிற்கு நானும் என் மகன் தியாகராஜனும் ஒரு எதிர்வழக்குரையும், என் மகன் பாலச்சந்திரன் தனியாக ஒரு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 20.12.2019 ம் தேதி ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தை சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் கேணிக்கரை காவல் நிலையத்தில் வாதி சுப்பிரமணியன் புகார்

கொடுத்தபோதுதான் தெரியும். எப்போது புகார் கொடுத்தார் என்றால் தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு புகார் கொடுத்தார். வாதி சுப்பிரமணியன் கொடுத்த புகாரின் அடிப்படையில் நானும் என் மகன்களும் கேணிக்கரை காவல்நிலையத்தில் 20.04.2022ம் தேதி விசாரணைக்கு ஆஜர் ஆனோம் என்றால் சரிதான். கேணிக்கரை காவல்நிலையத்தில் நடந்த விசாரணையில் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள வரவுகள் பற்றி நாங்கள் ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பாலசந்திரன் எழுதிக்கொடுத்த வாக்குமுலத்தில் நானும் என் மகன் தியாகராஜனும் படித்து பார்த்து தெரிந்துகொண்டோம் என கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். என் மகன் பாலச்சந்திரன் எழுதிக்கொடுத்த வாக்குமுலத்தில் வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி பெற்றுக்கொண்ட தொகை ரூபாய் 3500000ஐ 20.07.2022ம் தேதிக்குள் செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டோம் என்றும் செலுத்த தவறினால் கிரைய ஒப்பந்தத்தின்படி நீதிமன்றத்தில் வாதி நடவடிக்கை மேற்கொள்ளலாம் என எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. கேணிக்கரை போலிசார் விசாரணையில் என்ன ஆனது என்றால் ஒன்று ஜெயிலுக்கு போ அல்லது கையெழுத்து போடு என மிரட்டி இரவு 9.30மணியளவில் கையெழுத்து வாங்கினார்கள். 9.30மணியளவில் கையெழுத்து போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம் என்றால் சரிதான். கேணிக்கரை காவல்நிலையத்தில் எங்களை மிரட்டி இரவு 9.30மணி வரை காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என சம்பந்தப்பட்ட போலிசார் மீது நடவடிக்கை எடுக்க அவர்களது உயர் அதிகாரிகளுக்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் கேணிக்கரை காவல்நிலையத்தில் கொடுத்த வாக்குமூலம் உண்மையானது என்பதால்தான் காவல் உயர் அதிகாரிகளிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கேணிக்கரை காவல்நிலையத்தில் 20.04.2022ம் தேதி 20.07.2022ம் தேதிக்குள் பணத்தை கொடுப்பதாக ஒப்புக்கொண்டபடி கொடுக்கவில்லை

என்பதால் வாதி எங்களிடம் பணம் கேட்டார் என்றால் சரியல்ல. வாதி பணத்தை கேட்டபோது நீதான் காவல்நிலையத்திற்கு போனாயே அங்குபோய் வாங்கிக்கொள் என்று மிரட்டியதால் அவர் மீண்டும் கேணிக்கரை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. கேணிக்கரை காவல்நிலையத்தில் ஒப்புக்கொண்டபடி ஏன் பணத்தை கொடுக்கவில்லை என்று விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து வாதி மீது 30.06.2022ம் தேதி மாவட்ட குற்ற பிரிவு நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு காவல் ஆய்வாளர் இராமநாதனுக்கும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். என் மகன் பாலச்சந்திரன் கிரைய ஒப்பந்தப்படி ருபாய் 500000 வாங்கவில்லை என நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் (வா.சா.ஆ.5) சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் கையெழுத்து போடவில்லை என்றால் ஜெயிலுக்கு அனுப்பி விடுவோம் என்று போலிசார் எங்களை மிரட்டினார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 அறிவிப்பின் மூலம் வாதிக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட சொத்து பிரச்சனை சிவில் வழக்கு என்பதால் காவல்துறை தலையிடக்கூடாது என கூறித்தான் அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். 30.06.2022ம் தேதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்ப வேண்டிய அவசியம் என்ன என்றால் போலிசார் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை தூங்க விடவில்லை என்பதாலும் பிள்ளைகளுக்கு தொடர்ந்து தொந்தரவு கொடுத்தார்கள் என்பதாலும் அனுப்பினோம். அந்த விவரமும் அறிவிப்பில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 07.12.2023ம் தேதி சுப்பிரமணியன் கொடுத்த புகாரின் அடிப்படையில் எங்கள் மீது ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் பதிவு செய்தபோது தெரியாது. பின்னிட்டு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தபிறகுதான் தெரியும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் தெரியும் என்றும் அந்த விவரம் அறிந்து நாங்கள் இராமநாதபுரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான. அந்த முன்ஜாமீன் மனு தள்ளுபடி

செய்யப்பட்டது என்றால் தெரியாது. பின்னிட்டு எங்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இராமநாதபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் 2 நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது எனறும் அதில் நாங்கள் ஆஜராகி வருகிறோம் என்றால் சரிதான். 07.12.2023 ம் தேதி எங்கள் மீது வாதி கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு என் மகன் 1 ம் பிரதிவாதி என் மகள் 4 ம் பிரதிவாதிக்கு பெயரளவில் வாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக 13.02.2024 ம் தேதி ஒரு இனாம் செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தபிறகு வாதி என் மகளை 4 ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கண்ட தொகையை நானோ 3 ம் பிரதிவாதியோ பெறவில்லை என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தத்தில் கண்ட கையெழுத்துக்கள் எங்களுடையது அல்ல என குறிப்பிட்டு மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு நாங்கள் பணம் செலுத்தவேண்டி உள்ளது என்பதால்தான் வழக்குரை மற்றும் சாட்சியத்தில் குறிப்பிடட்டு மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் 1 முதல் 3 பிரதிவாதிகளாகிய நாங்கள் வாதிக்கு வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தத்தில் கண்ட தொகையை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.